தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் மலைவேம்பு பூங்கா அமைப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பண்ணை மேலாண்மைத் துறை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து கிழக்குப் பண்ணையில் 760 மலைவேம்பு கன்று மாணவர்களால் நேற்று (27-4-2015) நடப்பட்டது. நாடு முழுவதும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு "ஒருவருக்கு ஒரு மரம் என்ற திட்டம்" நிகழ்த்த அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாணவ, மாணவியரும் இரு மரங்களைப் பராமரிக்க வேண்டும்.

நிகழ்ச்சிக்கு பல்கலை துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் தலைமை வகித்து முதல் மரக்கன்றை நட்டு மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும், தூய்மையான காற்று, மழை பெறவும் மரங்கள் இன்றியமையாதது என்று எடுத்துரைத்தார்.

மலைவேம்பு மரம் மருத்துவ குணம் வாய்ந்தது. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவருக்கு கஷாயமாக கொடுக்கவும், பயோடீசல் தயாரிக்கவும் பயன்படுகிறது. தூய்மை வளாகம், பசுமை வளாகம் என்னும் கொள்கை வலியுறுத்தப்பட்டு வளாகம் எங்கிலும் மரக்கன்றுகள், பூச்செடிகள், காய்கறிகள், பழப் பயிர்கள் நட திட்டமிடப்பட்டு உள்ளது. இதனை விடுதிகளில் வசிக்கும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிலும் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களால் பராமரிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் மகிழ்ச்சியாக ஊக்கமுடன் பராமரிக்க விழைகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பயிர் மேலாண்மை இயக்குனர் முனைவர். சி. ஜெயந்தி அவர்கள், வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா அவர்கள், பண்ணை மேலாண்மைத் துறைத் தலைவர் முனைவர். சி. சின்னுசாமி அவர்கள், நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கினைப்பாளர் முனைவர். க. குமுதா அவர்கள், பண்ணை மேலாளர்கள், நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் 350 நாட்டு நலப் பணித் திட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்